NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2016

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 7 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in TAMIL.
5. It is in your own interest to write legibly and to present your work neatly.

---

IEB Copyright © 2016 

## SECTION A

## QUESTION 1 பகுதி ஒன்று


**கீழ் வரும் கதையைப் படித்து, பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக.**

கிருஷ்ணதேவராயர் நாட்டின் நலன் கருதி, வலிமையான குதிரைப் படையை அமைக்க எண்ணினார். ஆயிரம் குதிரைக் குட்டிகளை வரவழைத்தார் வீட்டுக்கொரு குதிரைக்குட்டியும் பணமும் கொடுத்தார். அவற்றை நல்லமுறையில் வளர்க்க ஆணையிடடார்.

தெனாலிராமன் தனக்குக் கொடுக்கப்பட்ட குதிரைக் குட்டியை ஓர் அறைக்குள் அடைத்து வைத்தான். உணவு கொடுப்பதற்கு மட்டும் சுவரில் ஒரு துவாரம் அமைத்திருந்தான். அதன் வழியாகக் குதிரைக்குக் காய்ந்த புல்லை மட்டுமே கொடுத்துவந்தான்.

சில மாதங்கள் சென்றன.

தெனாலிராமனைத் தவிர அனைவரும் தங்களது குதிரைகளுடன் அரண்மனைக்கு வந்தனர். குதிரைகள் கொழு கொழு வென இருந்தன. அவற்றைக் கண்ட மன்னர் பெருமகிழ்வு கொண்டார்.



தெனாலிராமனைப் பார்த்து, ''நீ மட்டும் குதிரையை ஏன் அழைத்து வரவில்லை?'' என்று கேட்டார்.

''அரசே! அந்தப் பொல்லாத குதிரையை என்னால் பிடித்து வர இயலவில்லை. குதிரைப்படைத் தலைவரை என்னுடன் அனுப்புங்கள். பிடித்து வருகிறோம்,'' என்று தெனாலி ராமன் கூறினான்.

தெனாலிராமன், குதிரை இருந்த அறையைப் படைத் தலைவருக்குக் காட்டினான். படைத்தலைவர் துவாரத்தின் வழியே எட்டிப் பார்த்தார். குதிரை அவரது தாடியைக் காய்ந்த புல்லென எண்ணி, வாயால் கவ்வி இழுத்தது.

வலி தாங்க முடியாமல் படைத்தலைவர் அலறினார்.

உடன் வந்திருந்த காவலர்கள் மிகவும் சிரமப்பட்டு அவரைக் குதிரையிடமிருந்து விடுவித்தனர். பிறகு சுவரை இடித்துக் குதிரையை வெளியே கொண்டு வந்தனர்.

IEB Copyright © 2016

எலும்பும் தோலுமாய் இருந்த குதிரையை அரண்மனைக்குக் கொண்டு சென்றனர். குதிரையைக் கண்ட மன்னர் ஆத்திரம் அடைந்தார்.



"குதிரை ஏன் இப்படி உள்ளது?" எனத் தெனாலி ராமனிடம் கேட்டார்.

"மன்னா! காய்ந்த புல்லைத் தின்று வளர்ந்தபோதே இக்குதிரை படைத்தலைவரைப் படாதபாடு படுத்திவிட்டது. நன்றாகத் தீனி போட்டிருந்தால் என்ன ஆகும்?" என்றான் தெனாலிராமன்.

கோபமடைந்த மன்னர், "குதிரையை வளர்க்க உன்னிடம் கொடுத்த பணத்தை என்ன செய்தாய்?" என்று கேட்டார்.

"அரசே! உங்கள் ஆணைக்குப் பயந்து, குடிமக்கள் தங்கள் பணத்தையும் செலவு செய்து குதிரையை வளர்த்தனர். அதனால் குதிரைகள் கொழுகொழுவென வளர்ந்தன. ஆனால் பட்டினி கிடந்ததால் மக்கள் இளைத்துப் போய்விட்டனர்" எனப் பதில் கூறினான்.

தெனாலிராமன் கூறியதைக் கேட்ட கிருஷ்ணதேவராயர் தம் தவற்றை உணர்ந்து வருந்தினார்.

**அறநெறிக் கதைகள்**
**(துணைப் பாடம்)**

1.1 **கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிறப்புக.**

1.1.1 ஆயிரம் குதிரைக் குட்டிகளை ____________________ (1)

1.1.2 ____________________ கொழு கொழு வென இருந்தன. (1)

1.1.3 அந்தப் பொல்லாத ____________________ என்னால் பிடித்து வர இயலவில்லை. (1)

1.1.4 வலி தாங்க முடியாமல் படைத்தலைவர் ____________________ (1)

1.1.5 குதிரையைக் கண்ட மன்னர் ____________________ அடைந்தார். (1)

1.2 **சரியான விடை எழுதுக:**

1.2.1 கிருஷ்ண தேவராயர் வீட்டுக்கொரு குதிரைக்குட்டியும் பணமும்கொடுத்து என்ன ஆணையிட்டார்? (2)

1.2.2 தெனாலிராமன் குதிரையை எவ்வாறு வளர்த்தான்? (2)

1.2.3 மன்னர் ஏன் பெருமகிழ்வு கொண்டார்? (2)

1.2.4 குதிரையை அரண்மனைக்குக் கொண்டு வராததற்கு தெனாலிராமன் கூறிய காரணம் என்ன? (2)

1.2.5 படைத் தலைவர் ஏன் அலறித் துடித்தார்? (2)

1.2.6 கிருஷ்ண தேவராயர் ஏன் வருத்தினார்? (2)

1.3 **எது உண்மை, எது உண்மை அல்ல என்று எழுதுக.**

1.3.1 கிருஷ்ன தேவராயர் ஆயிரம் குதிரைக்குட்டிகளை வரவழைத்தார். (2)

1.3.2 தெனாலிராமன் குதிரை தோட்டத்தில் இருந்தது. (2)

1.3.3 தெனாலிராமன் தன் குதிரையை மன்னரிடம் கொண்டு போகவில்லை. (2)

1.3.4 மன்னர் ஒவ்வொரு வீட்டுக்குப் பத்து குதிரைகளை கொடுத்தார். (2)

1.3.5 தெனாலிராமனின் குதிரை எலும்பும் தொலுமாய் இருந்தது. (2)

1.4 **ஒருமைக்கு பன்மை தருக:**

உ+ம்: குதிரை- குதிரைகள்

1.4.1 மரம் (1)

1.4.2 குட்டி (1)

1.4.3 மாதம் (1)

1.4.4 தேனீ (1)

1.4.5 சுவர் (1)

1.5 **எதிர்ச்சொற்கள் தருக.**

உ+ம்: பெரிய- சிறிய

1.5.1 உண்டு (1)
1.5.2 முன் (1)
1.5.3 பல (1)
1.5.4 உண்மை (1)
1.5.5 வெளியே (1)

IEB Copyright © 2016

1.6 **பெயர்ச்சொற்கள்/ வினைச்சொற்கள்**

1.6.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

1.6.2 நான்கு பெயர்ச்சொற்கள் எழுதுக. (4)

1.6.3 மூன்று வினைச்சொற்கள் எழுதுக. (3)

1.7 **ஆண்பாலுக்கு பெண்பால் தருக.**

1.7.1 அரசன் (1)

1.7.2 சிறுவன் (1)

1.7.3 தலைவன் (1)

1.7.4 வேலைக்காரன் (1)

1.8 **சேர்த்து எழுதுக**

1.8.1 குதிரை+ குட்டி (1)

1.8.2 எட்டி+ பார்த்தார் (1)

1.8.3 அதை+ சொல் (1)

1.8.4 பச்சை+ பெட்டி (1)

1.9 **குறிலை நெடிலாக மாற்றிக் கொள்.**

உ ம்: தடி- தாடி

1.9.1 அடி (1)

1.9.2 பல் (1)

1.9.3 கொடு (1)

1.9.4 முடி (1)

1.10 **வரிசையாய் எழ்துக**

1.10.1 உ அ ஊ எ ஐ ஆ ஈ (1)

1.10.2 தாடி ஆயிரம் அவள் இடி மன்னர் (1)

1.10.3 சா சொ ச் சீ சி செ சு சே சூ (1)

**60 marks**

## SECTION B

## QUESTION 2 பகுதி இரண்டு

2.1 கொன்றை வேந்தன் விளக்கக் கதைகள் :

2.1.1 முடிவு செய்க :

(a) ஆலயம் தொழுவது ------------------------------------------ (2)

(b) ஊருடன் பகைக்கின் ------------------------------------------ (2)

(c) கீழோர் ஆயினும் ------------------------------------------ (2)

(d) சூதும் வாதும் ------------------------------------------ (2)

2.1.2 பலரையும் பகைத்த பச்சையப்பன் என்ற கதையைப் பற்றி சுமார் 8–10 வரிகள் எழுதுக. (8)

2.2 திருக்குறள் :

2.2.1 கொடுக்கப் பட்டுள்ள பகுதிகளை பயன்படுத்தி பின்வரும் குறள் வெண்பாக்களை முடிவு செய்க:

வேண்டுதல் வேண்டாமை இலாணடி சேர்ந்தார்க்கு

அகர முதல எழுத்தெல்லாம்

நற்றாள் தொழா ஆர் எனின்

மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்

(a) -------------------------------- யாண்டும் இடும்பை இல. (2)

(b) ------------------------------ ஆதி பகவன் முதற்ற உலகு. (2)

(c) கற்றதனால் ஆய பயனென்கொல், வாலறிவன் ------------------- (2)

(d) ----------------------------- நிலமிசை நீடுவாழ்வார். (2)

2.2.2 திருவள்ளுவரைப் பற்றி 6–8 வரிகள் எழுதுக. (6)

IEB Copyright © 2016

2.3 குயில் பாட்டு

அந்தக் கணமே அதையும் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளில் கைசேர்ந்தேன்
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே
பேடை குயிதனைப் பேசியது 'வானரரே!
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மதான்
எப்பிறப்புக் கொண்டாலும் ஏந்தலே! நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்கும் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாம் தலைவரென மானிடரே
(குயில் பாட்டு)

2.3.1 மேற்காணும் வரிகளை எழுதியவர் யார் ? (1)

2.3.2 எந்தப் பறவையைப் பற்றி எழுதியுள்ளது ? (1)

2.3.3 மாடன் யார் ? (1)

2.3.4 இப்பாட்டில் வரும் ஒரு விலங்குவின் பெயர் தருக ? (1)

2.3.5 சின்னக்குயிலிக்கு யார் திருமணம் செய்ய பிடித்த்து ? (1)

2.3.6 குரங்கனைப் பற்றி 4 - 5 வரிகள் எழுதுக . (5)

**40 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2016